www.prepp.in

prepp
Your Personal Exams Guide

SET-4

Series GBM

Code No. 6

Roll No.

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains 8 printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

தமிழ்

TAMIL

கால அளவு : 3 மணி | *மொ. மதிப்பெண்கள் : 100*

Time allowed : 3 hours | *Maximum Marks : 100*

பகுதி அ *(50 மதிப்பெண்கள்)*

1. (அ) கீழ்வருவனவற்றில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : *1×5=5*

(i) விடியற் காளையில் கண்விளித்துப் படித்தேன்.

(ii) இளமையல் வருமை கொடுமையானது; முதுமையில் தணிமை கொடுமையானது.

(iii) தீபாவலி பண்டிகைக்கு சிரப்பு ரயில்கள்.

(iv) பளாப் பழச்சுளை தேண்போல் இனிக்கும்.

(v) கதிர் அருக்கக் கூலி மிக குறைவாக தறுகிறார்கள்.

(vi) நண்செய் நிலத்தில் பயிர்கள் விலையவில்லை.

(vii) இன்றைய இந்திய அனி வருவாக உள்ளது.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக : *1×5=5*

(i) அவன் மாட்டு தாவணி பேருந்து நிலையத்திற்கு சென்றான்.

(ii) மலை பாம்பை கண்டு அலறினான்.

(iii) வாழை தண்டு உடல்நலத்திற்கு சிறந்தது.

(iv) இந்த தேரில் எத்தனை சக்கரங்கள் ?

(v) வெள்ளை தாளில் எழுதி பார்த்தேன்.

(vi) மல்லிகை பூ நல்ல மணத்தை தரும்.

(vii) தீ பந்தத்திற்கு அருகே கைகுழந்தையைக் கொண்டு செல்லாதே.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக : *1×5=5*

(i) கண்மணி பாடம் படித்தாள்.
(செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக)

(ii) மலர்மன்னன் திருத்தினான்.
(தன்வினைவாக்கியமாக மாற்றுக)

(iii) கண்ணனிடம் உலகம் மிகவும் சிறியது என்று இராமன் கூறினான்.
(நேர்க் கூற்றாக மாற்றுக)

(iv) இன்று மழை பெய்தது; இன்றைய ஆட்டம் கைவிடப்பட்டது.

(தொடர்வாக்கியமாக மாற்றுக)

(v) குமரனும் வளவனும் பாடம் படித்திலர்.

(உடன்பாட்டுவினை வாக்கியமாக மாற்றுக)

(vi) மூவேந்தர்களாலும் தமிழ் வளர்க்கப்பட்டது.

(செய்வினைவாக்கியமாக மாற்றுக)

(vii) என் தந்தை என்னிடம் சினம்கொண்டார்.

(எதிர்மறைவாக்கியமாக மாற்றுக)

2. (அ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக : *2×5=10*

தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலத்தில் தோன்றியவை சங்க இலக்கியங்கள் எனப் போற்றப்பெறும் பாட்டும் தொகையும் ஆகும். இவை தோன்றிய பிறகு அறஇலக்கியங்களும் அவற்றை ஒட்டிய காலக்கட்டத்தில் இரட்டைக்காப்பியங்கள் எனப்பெறும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களும் தோன்றின. இவை சமண, பௌத்தக் கோட்பாட்டைத் தழுவி எழுதப்பெற்றவையாகும். இக்காலக் கட்டத்திலிருந்து பக்தி இலக்கியக் காலம் வரை தமிழகத்தின் வரலாறு போன்றவற்றைச் சரியாக அறிந்துகொள்ளச் சான்றுகள் இல்லை. இதனால் இக்காலத்தைக் களப்பிரர் காலம் அல்லது இருண்ட காலம் என்பர்.

Prepp
Your Personal Exams Guide

தமிழகத்தில் பல்லவர் காலமாகிய கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்து பக்தி இயக்கம் வளரத்தொடங்கியது. சைவ சமயம் சார்ந்தவர்கள் சிவபெருமானையும் வைணவ சமயம் சார்ந்தவர்கள் திருமாலையும் முழுமுதற்கடவுளாகக் கொண்டு மக்களிடையே பக்தியை வளர்த்தனர். அப்போது தோன்றிய இலக்கியங்கள் பக்தி இலக்கியங்கள் எனப்பெற்றன. நாயன்மார்கள் இயற்றியவை பன்னிருதிரு முறைகள் என்றும். ஆழ்வார்கள் இயற்றியவற்றை நாலாயிர திவ்வியப்பிரபந்தம் எனவும் வழங்குவர்.

வினாக்கள் :

(i) பாட்டும் தொகையும் எப்போது தோன்றியவை ? அவை எவ்வாறு அழைக்கப்பெற்றன ? *2*

(ii) இரட்டைக் காப்பியங்கள் என்று எவற்றிற்குப் பெயர் ? அவை எம்மதக் கோட்பாட்டை தழுவி எழுதப்பெற்றவை ? *2*

(iii) இருண்ட காலம் என எதனை அழைப்பர் ? *2*

(iv) பக்தி இலக்கியங்கள் எப்பொழுது எழுதப்பெற்றன ? அவை யார் யாரை முழுமுதற்கடவுளாகக் கொண்டு எழுதப்பெற்றன ? *2*

(v) நாயன்மார்கள், ஆழ்வார்கள் எனப்படுபவர் யார் ? அவர்கள் இயற்றிய பாடல்களுக்குரிய நூலின்பெயர்கள் யாவை ? *2*

(ஆ) ரியோ பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவை நேர்காணல் செய்க. *5*

அல்லது

கீழ்வரும் பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :

தாராள மனப்பான்மை என்று சொல்லித்
தண்ணீர்போல் பணத்தையெலாம் செலவுசெய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம்; வாழ்வில்
சிக்கனந்தான் ஒருவனுக்கு சிறந்த சொத்தாம்;
சீராகச் செட்டாக ஒவ்வோர் நாளும்
சிக்கனமாய்ப் பெரியார்போல் வாழ்ந்து வந்தால்
பாராங்கல் மீதில் விழும் மழைநீர் போல்
பளிச்சென்னு துன்பமெலாம் சிதறிப்போகும்.

வினாக்கள் :

(i) ஒருவனுக்குச் சிறந்த சொத்து எது ? *1*

(ii) ஒவ்வோர் நாளும் எவ்வாறு வாழவேண்டும் ? *1*

(iii) துன்பம் எவ்வாறு சிதறிப்போகும் ? *1*

(iv) எவ்வாறு பணத்தை செலவுசெய்தல் கூடாது ? *1*

(v) இப்பாடலுக் கேற்ற ஒரு தலைப்பைக் கொடு. *1*

3. கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒரு** தலைப்பில் மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக : *10*

(i) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(ii) தேசிய நதி நீர் இணைப்புத் திட்டம்.

(iii) வெள்ளத்தினால் விளையும் கேடுகள்.

Prepp
Your Personal Exams Guide

4. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக : *10*

புதியதாக கட்டிய உன் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி, மின் நிலைய பொறியாளருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

அல்லது

மாணவர் விடுதியில் தங்கிப்பயிலும் உமது தம்பி / தங்கைக்கு அறிவுரை கூறி கடிதம் ஒன்று வரைக.

(எக்கடிதமாயினும் உமது முகவரி : தமிழ் அழகன் / தமிழ் அரசி, 102, ஔவைசாலை, திருச்சி-1 எனக்கொள்க.)

பகுதி ஆ *(50 மதிப்பெண்கள்)*

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக : *10×2=20*

(i) நீதி கூறும்போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

(ii) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரைவடிவில் தருக.

(iii) இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக நுந்தம் பாடப்பகுதியில் வரும் கருத்துகளைத் தொகுத்து வரைக.

(iv) நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமைஉணர்வும் ஈகையும் பற்றிக் கட்டுரை வரைக.

6. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடைதருக : *5×2=10*

(i) பொறையுடைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(ii) கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

(iii) வேலன் தனக்கு நன்றி கூறிய அன்னத்தினைப் பார்த்துக் கூறிய எழுச்சியுரைகளை எழுதுக.

(iv) இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

7. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக : *5*

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

(i) இப்பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) இப்பாடலின் திணை, துறைகளை விளக்குக. *2*

(iii) யாரைப் பார்த்துக் கூறுவதுபோல் இவ்வரிகள் அமைத்துள்ளன ? *1*

அல்லது

"நின்றான், எழுந்து 'நிறைமதி வாண்முகம்
கன்றியது' என்றவள் கண்ணீர் கையான் மாற்ற"

(i) இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) இந்நிகழ்ச்சி எப்போது ? எங்கு நிகழ்ந்தது ? *2*

(iii) 'நிறைமதி வாண்முகம்' – யாருடையது ? *1*

8. ‘வேலி’ – இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி வரைக. *10*

அல்லது

‘சட்டை’ – என்ற சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

9. பால் வண்ணம் பிள்ளையின் பண்பு நலன்களை எழுதுக. *5*

அல்லது

‘மகன்’ – என்ற சிறுகதையில் வரும் தனபாக்கியம், மல்லிகா என்ற இருவரின் பண்பு நலன்களை எழுதுக.

Prepp Your Personal Exam Guide